லிற்ரோ காஸ் ரேர்மினல் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் - 2023

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

லிற்ரோ காஸ் ரேர்மினல் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பன உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் PPE கொள்கையானது, அனைத்து நிலையான சொத்துக்களையும் ஆரம்பத்தில் மூலதன WIP கணக்கில் பதிவு செய்து, ஆண்டின் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் அந்த சொத்துக்களை மூலதனமாக்குவதாகும். எனினும், கம்பனியின் மூலதன WIP கணக்குகளில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 126.92 மில்லியன் நீண்ட கால மூலதனம் இல்லாத WIP தொகை உள்ளடங்குகிறது. | முகாமைத்துவ கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | PPE மூலதனமயமாக்கல் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் இது கணக்கீட்டு நியமத்துடன் இணங்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 மற்றும் 2022 சனவரி 14 ஆம் திகதிய 01/2015(ii) | பிரதம நிதி உத்தியோகத்தர்/ பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் மற்றும் எந்தவொரு SOE இனதும் எச்எம் 1-1 வகைக்கு சமமான அல்லது அதற்கு மேலுள்ள ஏனைய உத்தியோகத்தர்களும் மாதமொன்றிற்கு முறையே 145 மற்றும் 115 லீற்றருக்கு சமமான எரிபொருள் படியை பெற்றுக்கொள்வதற்கு உரித்துள்ளவராவர்.<br><br>எனினும் கம்பனி ஏழு ஊழியர்களுக்கு மேற்படி எரிபொருள் எல்லையை விஞ்சி 200 லீற்றர் முதல் 600 லீற்றர் வரையிலான மாதாந்த எரிபொருள் படியை வழங்கியிருந்தது. அதன் பிரகாரம், அந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1.75 மில்லியன் மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கம்பனி மீளாய்வாண்டில் எரிபொருள் படிக்கு உரித்தற்ற ஊழியர் ஒருவரிற்கு ரூபா 301,648 படி எரிபொருள் படியை வழங்கியிருந்தது. | எரிபொருள் படி ஊழியர்களின் பணிக்குழு, ஆற்றப்பட்ட வகிபங்கு/ தொடர்புடைய கடமை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. கம்பனியின் செயற்பாடுகள் மாதிரிக்கு ஊழியர்கள் பிரயாணம் செய்ய வேண்டும். ஷெல் (Shell) முகாமைத்துவத்திலிருந்து இந்த நடைமுறை பயன்படுத்தப்பட்டது. லிற்ரோ காஸ் ரேர்மினல் லங்கா பிறைவேட் லிமிட்டட்டானது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. | சபை இது தொடர்பாக பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க வேண்டியதுடன் தேவைப்படும் விலகல்களுக்கு நிதி அமைச்சின் முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2015 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 மற்றும் 2016 ஒக்தோபர் 27 ஆம் திகதிய பிஈடி 01/2015(i) | உத்தியோகபூர்வ வாகனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துள்ள உத்தியோகத்தர் ஒருவர் உத்தியோகபூர்வ | பணிக் குழு மற்றும் பணிப்பாளர் சபையின் ங்கீகாரத்துடன் தொடர்புடைய கடமைக்கு ஏற்ப வாகன படி மற்றும் எரிபொருள் ஒதுக்கீடு | சபை இது தொடர்பாக பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க வேண்டியதுடன் |

| | | |
|---|---|---|
| வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு அல்லது ரூபா 50,000 மாதாந்த போக்குவரத்து படியையும் பதவிக்கு பொருந்தக்கூடிய மாதாந்த எரிபொருள் படியையும் பெற்றுக்கொள்வதற்கான தெரிவைக் கொண்டுள்ளார். எனினும், அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு சாரதி அல்லது சாரதி படி வழங்கப்படக்கூடாது. சுற்றறிக்கைகளுக்கு முரணாக | வழங்கப்படுகிறது. பணவீக்கத்திற்காகத் திருத்தப்பட்ட கட்டமைப்பே இதுவாகும். | தேவைப்படும் விலகல்களுக்கு நிதி அமைச்சின் முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (i) கம்பனி ஏழு ஊழியர்களுக்கு ரூபா 171,600 முதல் 360,360 வரையான மாதாந்த போக்குவரத்து படியை வழங்கியிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 15.36 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மீளாய்வாண்டில் மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து இரண்டு ஊழியர்களுக்கு ரூபா 0.6 மில்லியன் கூட்டுமொத்தமான மாதாந்த சாரதி படி செலுத்தப்பட்டுள்ளது. | வேலை தொடர்பாக வாகனங்கள் தேவைப்படும் சில ஊழியர்களுக்கு கம்பனிக்கு சொந்தமான வாகனங்கள் கிடைக்கும்போது எரிபொருள் ஒதுக்கீட்டுடன் கம்பனி பேணும் வாகனங்கள் வழங்கப்படுகின்றன. இந்த ஊழியர்களுக்கு வாகன படி செலுத்தப்படுவதில்லை.<br><br>கம்பனியின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக அன்றாடச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வாகனங்களை வழங்குவது முக்கியமானதாகும். | சபை பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க வேண்டியதுடன் தேவைப்படும் விலகல்களுக்கு நிதி அமைச்சின் முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (i) கம்பனி மீளாய்வாண்டில் போக்குவரத்து படிக்கு உரித்தற்ற பத்து ஊழியர்களுக்கு ரூபா 6.09 மில்லியன் கூட்டுமொத்தமான மாதாந்த போக்குவரத்து படியை செலுத்தியிருந்தது. | வாகன படிகள் வேலைக் குழுக்கள் மற்றும் வாகனங்களின் சந்தை விலைவிகிதங்களின் அடிப்படையில் உள்ளது. ஷெல் முகாமைத்துவத்திலிருந்து இந்த நடைமுறை பயன்படுத்தப்பட்டது.<br><br>லிற்ரோ காஸ் ரேர்மினல் லங்கா பிறைவேட் லிமிட்டட்டானது 2007 | சபை பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க வேண்டியதுடன் தேவைப்படும் விலகல்களுக்கு நிதி அமைச்சின் முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் பணிப்பாளர் சபையால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (இ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி சுற்றறிக்கை 2/2015 | இந்த சுற்றறிக்கைக்கு முரணாகவும் சபையால் அங்கீகரிக்கப்பட்ட செல்லுபடியாகும் கொள்கை ஆவணம் இல்லாமலும், கம்பனி 2020 ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊழியர்களுக்கு கைத்தொலைபேசிகளை கொள்வனவு செயற்வதற்கான செலவை மீள்நிரப்பு செய்கிறது. கம்பனி 2023 ஆம் ஆண்டில் ஏழு மொபைல் போன்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 400,000 தொகையை செலவிட்டிருந்தது. | பதவியணியினர் தமது கடமைகளைச் செய்வதற்கு கைத்தொலைபேசிகள் வழங்கப்படுகின்றன. பதவியணி உறுப்பினர் மற்றும் மனிதவளத் துறை சிக்கல்களால் மேற்கொள்ளப்படும் பணியின் மீது செயற்பாட்டுத் தலைவரால் தேவை பரிந்துரைக்கப்படுகிறது. இந்தப் பயன்பாடுகளை அணுகுவதற்கு, கைத்தொலைபேசி அண்ட்ராய்டு அல்லது ஐஓஎஸ் (Android or IOS) மொபைல் சாதனமாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில் நாங்கள் கிளவுட் நேட்டிவ் அப்ளிகேஷனை (cloud native application) உருவாக்குவோம் என்று எதிர்பார்க்கிறோம், இதற்கும் கைத்தொலைபேசிகள் செயற்படுவதற்குத் தேவைப்படும், மேலும் லிற்ரோ அல்லாத வேலை நேரங்களில் வீட்டிலிருந்தே வேலை செய்ய முடியும், ஏனெனில் எமது செயற்பாடு 12 மணி நேரத்திற்கும் அதிகமாகவும், பெரும்பாலான விடுமுறை நாட்களிலும் இயங்குகின்றது. | சபை பொருந்தக்கூடிய வழிகாட்டல்களுக்கு இணங்க வேண்டியதுடன் தேவைப்படும் விலகல்களுக்கு பொது திறைசேரியின் முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2020 சனவரி 27 ஆம் திகதிய பிஈடி 01/2020 மற்றும் 2015 யூன் 17 ஆம் திகதிய பிஈடி 3/2015 | நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர் ஒருவரின் அதிகபட்ச அமர்வு படி ரூபா 12,500 ஆக உள்ளதுடன் அவர் அமர்வு படிக்கு மாத்திரமே உரித்துள்ளவராவர். எனினும், கம்பனி 2020 முதல் மூன்று நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களுக்கு ரூபா 100,000 மாதாந்த போக்குவரத்து படியை செலுத்தியிருந்தது. | இது கம்பனியின் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | சபை பொருந்தக்கூடிய வழிகாட்டல்களுக்கு இணங்க வேண்டியதுடன் தேவைப்படும் விலகல்களுக்கு பொது திறைசேரியின் முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 11 ஆம் திகதிய பிஈடி 04/2023 | 2022 ஆம் நிதியாண்டில் இலாபம் ஈட்டி, ஊக்குவிப்பு படியை செலுத்தியிருந்த வணிக கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகள் ஊழியர் ஒருவரிற்கு ரூபா 20,000 படி மிகையூதியத்தை முன்மொழிந்திருக்க இயலுமான போதிலும் கம்பனி ஊழியர் ஒருவரிற்கு ரூபா 100,000 படி மிகையூதியத்தை செலுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டில் மேலதிகமாக செலுத்தப்பட்ட மொத்த மிகையூதியம் ரூபா 1.36 மில்லியன் தொகையாகும். | ஷெல் காலத்திலிருந்து ஆண்டு இறுதி போனஸ் வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டு வரை அந்தத் தொகையானது 60,000 ஆக இருந்தது, கம்பனியின் நிதி செயலாற்றலின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் 100,000 வரை அதிகரிப்பதற்கு பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது (ஏற்கனவே அங்கீகாரங்கள் பகிரப்பட்டுள்ளன).<br><br>லிற்ரோ காஸ் ரேர்மினல் லங்கா பிறைவேட் லிமிட்டட்டானது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் பணிப்பாளர் சபையால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | சபை பொருந்தக்கூடிய வழிகாட்டல்களுக்கு இணங்க வேண்டியதுடன் தேவைப்படும் விலகல்களுக்கு பொது திறைசேரியின் முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஊ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பிஈடி சுற்றறிக்கை மற்றும் அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளுக்கான | அனைத்து அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களும் (SOE) தமது பதவியணி மற்றும் சம்பளத்திற்காக பொது திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும், கம்பனி இத் தேவைப்பாட்டுடன் | ஷெல் முகாமைத்துவக் காலத்திலிருந்து கட்டமைப்பும் அடிப்படையும் தொடர்கிறது. மேலும், நாங்கள் முறையே 2019 திசெம்பர் 14 மற்றும் 2022 நவம்பர் 20 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை திணைக்கள பணிப்பாளர் | கம்பனி அதன் பதவியணி மற்றும் சம்பளத்திற்காக பொது திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (SOEs) செயற்பாட்டு கையேட்டின் 3.1 ஆம் பிரிவு | இணங்கியிருக்கவில்லை. | நாயகத்தின் கடிதங்களிற்கான உரிய விபரங்களை சமர்ப்பித்துள்ளோம். | |
| (எ) | 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய 04/2022 மற்றும் மற்றும் 2024 பெப்ரவரி 28 ஆம் திகதிய 01/2024 பிஈடி சுற்றறிக்கை | மேற்படி சுற்றறிக்கைக்கு முரணாக 2018 மே 01 முதல் நிறுவனத்தின் பதவியணியினருக்கான வட்டியில்லா பதவியணியினர் நிவாரணக் கடன் கொள்கையை அங்கீகரித்து நடைமுறைப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்ததுடன் பொது திறைசேரியின் முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 2022 மற்றும் 2023 இல் திருத்தப்பட்டது. மேலும் கம்பனி வீடமைப்புக் கடன் என பெயரிடப்பட்ட புதிய பதவியணியினர் நிவாரணக் கடன் வகையை அறிமுகப்படுத்தியதுடன் 2023 ஆம் ஆண்டில் 1.7 மில்லியனை வழங்கியது. | கம்பனியின் வழக்கமான நடைமுறையின் பிரகாரம், கம்பனியின் கொள்கை மற்றும் நடைமுறைகளுக்கு சபை அங்கிகாரங்கள் பெறப்படுவதில்லை. ஏற்கனவே மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து செலவுகளையும் சேர்த்து கம்பனியின் வருடாந்த பாதீட்டிற்கு சபை அங்கீகாரங்கள் பெறப்படுகின்றன. | புதிய கொடுப்பனவுகளுக்கு பொது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவு

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 1,540.4 மில்லியன் இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 582.4 மில்லியன் தொகையானதால் நிதிசார் விளைவுகளில் ரூபா 958 மில்லியன் தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம் ரூபா 554.7 மில்லியன் அதிகரித்தமை மற்றும் நிதி வருமானம் ரூபா 474.1 மில்லியன் அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

## 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஐந்து (05) ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவினங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் பின்வருமாறுள்ளது.

| **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | **தொகை ரூபா. மிலிலியன்** | | | | | **மாற்றத்தின் சதவீதம் %** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **2023** | **2022** | **2021** | **2020** | **2019** | **2023** | **2022** | **2021** | **2020** | **2019** |
| வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம் | 1,999 | 1,444 | 1,616 | 1,508 | 2,064 | 38.4 | -10.6 | 7 | -27 | 1 |
| விற்பனை கிரயம் | 319 | 319 | 316 | 327 | 316 | 0 | 0.9 | -3 | 3 | -3 |
| செயற்பாட்டிலிருந்தான (நட்டம்)/ இலாபம் | 1,169 | 656 | 924 | 918 | 1,748 | 78.2 | -29.0 | 1 | -47 | 3 |
| நிதி வருமானம் | 994 | 520 | 304 | 517 | 702 | 91.2 | 71.1 | -41 | -26 | 14 |
| நிதி செவினங்கள் | 2.7 | 17.2 | 28 | 83 | 135 | -84.3 | -38.6 | -66 | -39 | - |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

முந்தைய ஐந்து (05) ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது முக்கிய விகிதங்கள் பின்வருமாறுள்ளன.

| **ஆண்டு**<br>**விகிதம்** | **2023** | **2022** | **2021** | **2020** | **2019** |
|---|---|---|---|---|---|
| தேறிய இலாப விகிதம் (PBT) (%) | 108 | 80 | 76.04 | 95.19 | 104.22 |
| ஈடுபடுத்திய மூலதனம் மீதான வருவாய் (ROCE) (%) | 16 | 9.60 | 9.60 | 12.27 | 18.47 |
| உரிமை மீதான திரும்பல் (%) | 12.15 | 4.7 | 8.99 | 9.61 | 14.77 |
| சொத்து மீதான திரும்பல் (%) | 14.78 | 8.49 | 9.18 | 11.83 | 17.67 |
| சோத்து புரள்வு (தடவைகளின் எண்ணிக்கை) | 13.67 | 10.42 | 15.27 | 23.43 | 43.92 |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 5.60 | 1.14 | 4.81 | 13.15 | 14.21 |
| விரைவு விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 5.59 | 1.13 | 4.80 | 13.12 | 14.19 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு நடவடிக்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| லிற்ரோ காஸ் லங்கா லிமிட்டட்டிற்கு பெற்றோலிய திரவ எரிவாயுவை மொத்தமாக களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குவதற்காக கம்பனி ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் 2023 மற்றும் 2022 ஆம் ஆண்டில் முறையே 525 சதவீத மற்றும் 352 சதவீத (விற்பனைக் கிரயத்தின் அடிப்படையில்) கணிசமான உயர் மொத்தலாப எல்லையை பதிவு செய்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மொத்தலாபம் ரூபா 554 மில்லியனால் கணிசமானளவு அதிகரித்திருந்தது. 2019 ஒக்தோபர் 28 ஆம் திகதிய எல்ஜீஜீரீஎல்/ஏஓபீ/03/ஒக்தோபர்/2019 சபைப் பத்திரம் மூலம் தீர்மானிக்கப்பட்ட ஒரு தொண் எரிவாயுக்கான ஐ.அ.டொலர் 51 என்ற செயற்திறன் கட்டணம் (throughput fee) 2023 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 20 ஆகக் குறைக்கப்பட்டிருந்தது. எனினும், திரவ எரிவாயு மொத்த களஞ்சிய வசதிக் கட்டணங்களை மேலும் குறைத்து, எரிவாயு விலையைக் குறைப்பதற்கு உதவுவதன் மூலம் லிற்ரோ காஸ் லங்காவின் செயற்பாட்டு கிரயத்தைக் குறைப்பதற்கும் நாட்டின் எரிவாயு வாடிக்கையாளருக்கு ஏற்படும் அசௌகரியத்தைக் குறைப்பதற்கும் கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | லிற்ரோ காஸ் லங்கா லிமிட்டட்டின் செயற்திறன் கட்டணத்தைக் குறைப்பதன் மூலம் அதன் செயற்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதற்கு கம்பனி குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கம்பனியின் நீண்டகால நம்பகத்தன்மை மற்றும் செயற்பாட்டு சிறப்பை உறுதி செய்யும் அதே வேளையில், கிரய குறைப்பு மற்றும் வாடிக்கையாளர் வசதியை ஆதரிக்கும் நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்து மதிப்பீடு செய்து செயற்படுத்துவோம். உற்பத்தியின் தற்போதைய அதிகரித்து வரும் தேவையுடன் தடையில்லாத விநியோகத்தை உறுதிசெய்வதற்கு களஞ்சிய திறனை விரிவுபடுத்த வேண்டும் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இதற்கான முதலீடு கணிசமானதாகும். எனவே, செலவைக் குறைப்பதற்கான எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன்னர் இந்த சிக்கலைக் கவனிக்க வேண்டும். | செயற்பாட்டு செலவுகளைக் குறைப்பதற்காக, கம்பனி செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒக்சிஜன் நிரப்பு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காகவும்/ அல்லது மேலதிக எல்பிஜீ செயற்பாடு மற்றும் களஞ்சிய விரிவாக்க செயற்திட்டமாக அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய செயற்பாடுகளாக பயன்படுத்துவதற்கும் கெரவலப்பிட்டியவில் உள்ள 22 ஏக்கர் காணி மற்றும் கட்டிடம் ஒன்றிற்கான மொத்த குத்தகை வாடகையின் ஒரு பகுதியாக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 500 மில்லியன் தொகையை கம்பனி செலுத்தியிருந்தது. எனினும், கம்பனியில் நடைபெற்றுவரும் மறுசீரமைப்பு பணியின் காரணமக மேற்படி காணியை கம்பனிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை | SLLDC இற்கு பணம் செலுத்துவது கம்பனியின் செயல்பாடுகளுக்கு அவசியமான மூலோபாய செயற்திட்டங்களுக்கு காணியை பாதுகாக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டது. தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் காரணமாக அமைச்சரவையின் அங்கீகாரம் தாமதமான போதிலும், காணி குத்தகைக்கு உத்தரவாதம் அளிக்கப்படுவதையும், கம்பனி குறித்துரைத்த நலன்களைப் | கம்பனி இந்த சொத்தை குறித்துரைத்த நோக்கத்திற்காக அல்லது தொடர்புடைய அதிகாரிகளின் அங்கீகாரத்துடன் வேறு ஏதேனும் பொருத்தமான நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| அங்கீகாரம் மீளாய்வாண்டு வரையில் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே, மேற்படி கொடுப்பனவிலிருந்து கம்பனி இதுவரை எந்த நலனையும் பெற்றிருக்கவில்லை. | பெறுவதையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. SLLDC மற்றும் நிதி அமைச்சுடனான தொடர்ச்சியான தொடர்பாடல் மற்றும் பேச்சுவார்த்தை மூலம் நிலைமை முன்கூட்டியே முகாமை செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த வசதிகளில் வைக்கப்படும் ஏனைய கம்பனி வசதிகளின் புதிய திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன. அது இறுதி செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டவுடன் அது பற்றிய விபரங்கள் வழங்கப்படும். | |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 4.2.2 மற்றும் 4.2.3 ஆம் வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் பெறுகை குறியீட்டின் தொடர்புடைய கட்டமைப்பின் பிரகாரம் பெறுகை திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுகை நடவடிக்கைகளுக்கு ஒரு பெறுகை நிறுவனம் தயாராக இருக்க வேண்டும். மேலும், ஒரு பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும், காலவரிசைப்படி, ஒவ்வொரு தனிப்பட்ட பெறுகை நடவடிக்கையின் தொடக்கத்திலிருந்து அது முடிவடையும் வரையிலான படிகளை விபரிக்க வேண்டும். எனினும், கம்பனி மேற்கூறிய வழிகாட்டல்களுக்கு ஏற்ப பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை கால அட்டவணையை தயாரித்திருக்கவில்லை. | ரூபா 50 மில்லியனிற்கு அதிகமான பெறுமதியுடைய கொள்வனவுகளுக்கான (DPC பிரதானம்) பெறுகைத் திட்டமும் கால அட்டவணையும் வரிசை அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கடை அளவிலான பெறுகைகளுக்கான பெறுகைத் திட்டத்தை நிறுவனம் தயாரிக்கவில்லை. | ஒவ்வொரு பெறுகை நடவடிக்கையின் படிகளையும் விபரிக்கும் காலவரிசைப்படி பெறுகை அட்டவணையை கம்பனி தயாரிக்க வேண்டும். |

## 3.4 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் LGTLL இன் ரூபா 6.96 பில்லியன் புத்தக பெறுமதியுடனும் ரூபா 5.98 பில்லியன் தேறிய பெறுமதியுடனும் மொத்த சொத்துக்களில் 41% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஆனால் கம்பனி 2023 திசெம்பர் 31 இலி உள்ளவாறு நிலையான சொத்துக்களின் இருக்கும் தன்மையை சரிபார்ப்பதற்கு சொத்து சரிபார்ப்பு அல்லது பொருள் மெய்மையாய்வு எதனையும் நடாத்தியிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | வலுவான சொத்து முகாமைத்துவ முறைமையை உறுதிப்படுத்துவதற்காக கம்பனி வருடாந்த சொத்து மெய்மையாய்வை அமுல்ப்படுத்த வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சபையின் நியமனங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரிசை அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்ட தலைவர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சபையினால் (தாய்க் கம்பனி) நியமிக்கப்பட்டிருந்தார் மேலும் அவர் 2019 ஆம் ஆண்டில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கம்பனியின் சபையினால் நியமிக்கப்பட்டிருந்தார். 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளுக்கான கூட்டிணைந்த ஆளுகை தொடர்பான வழிகாட்டலின் 2.2.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் தலைவர் பணிப்பாளர் சபையின் தலைவராக உள்ளதுடன் 2.5.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் மூலோபாய, தந்திரோபாய மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பது பிரதம நிறைவேற்று அதிகாரியின் பொறுப்பாகும். இந்த இரண்டு பதவிகளையும் ஒரே நபர் கொண்டிருப்பது நல்லாட்சி நடைமுறைகளுக்கு எதிரானதாகும். | LGTLL இன் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக திரு. எம் எஸ் ஜீ பீரிஸை நியமிப்பதற்கான முடிவு, ஒரு அவசர செயற்பாட்டு நெருக்கடியை நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தால் உந்தப்பட்டு கம்பனி மற்றும் தேசத்தின் சிறந்த நலனுக்காக எடுக்கப்பட்டது. ஒரு சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளரின் பிரசன்னம் நல்லாளுகை தரங்களைப் பேணுவதற்கான எமது அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்துகிறது. | தலைவர் மற்றும் CEO ஆகிய இரண்டு சக்திவாய்ந்த முரண்பட்ட வகிபங்குகளை பிரிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வுக் குழு குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட்டு அதன் பரிந்துரைகள் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் கம்பனிக்காக ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டது. | குறைந்தபட்சத் தேவையைப் பூர்த்தி செய்யாத போதிலும் 2023 ஆம் ஆண்டில் கணக்காய்வு திட்டத்தை உள்ளடக்குவதில் கவனம் செலுத்தப்பட்டது. எனினும், குறைந்தபட்சம் நான்கு கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் தேவைப்பாடு 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படும். | கணக்காய்வு குழு தவறாமல் கூடி, கம்பனியின் நிதி செயற்பாடு மற்றும் ஏனைய தொடர்புடைய விடயங்களை மேற்பார்வையிட வேண்டும். |